Fifteen Years in Service of Tamil **தமிழ் பேணலில் பதினைந்து வருடங்கள்**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2009
# அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## Tamil Competition - Australian Society of Graduate Tamils

## தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் – 2009

15 ஆண்டுகளுக்கு முன்பு அவுஸ்திரேலியாவின் நியூசவுத்வேல்ஸ், கன்பரா மாநிலங்களில் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன. 10 வது ஆண்டிலிருந்து **அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கத்தின்** தலைமையின் கீழ் ஊக்குவிப்புப் போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இந்த வருடப் போட்டிகளுக்கான கருப்பொருள் **“என்று எமது இன்னல்கள் தீர்ந்து பொய்யாகும்”** என்பதாகும். ஈழத்தில் சுமார் 60 வருடங்களாக எமது மக்கள் சொல்லொணா துன்பங்களுக்கு ஆளாகிவருகின்றார்கள். அவர்கள் துயர் நீங்கி நல்ல ஒரு எதிர்காலம் அமையாதா? என்ற கருத்தை மையமாக வைத்தே இந்த ஆண்டிற்கான போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தத் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் சிட்னியிலும் மற்றைய அவுஸ்திரேலிய, நியூசிலாந்து மாநிலங்களிலும் நாடாத்தப்படவிருக்கின்றன. இம்முறையும் எழுத்தறிவுப் போட்டிகளுடன் பேச்சு, கவிதை மனனப் போட்டிகளும் (குறிப்பிட்ட பிரிவுகளில் மட்டும்) அவுஸ்திரேலிய-நியூசிலாந்து மட்டத்தில் தேசியப் போட்டிகளாக நடாத்தப்பட இருக்கின்றன. இப்போட்டிகள் முதலில் மாநில மட்டத்தில் நடாத்தப்பட்டுப் பின்னர் தேசிய மட்டத்தில் நடைபெறும். மாநிலப் போட்டிகளுக்கும், தேசிய மட்டத்திலான போட்டிகளுக்கும் வேறுவேறாகப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும். தேசிய மட்டத்தில் நடைபெறும் 10 போட்டிகளுக்கும் **தங்கப்பதக்கம்** முதற் பரிசாக வழங்கப்படும்.

சில முக்கியமான மாற்றங்களை இங்கு தருகின்றோம்:

1) **இளைஞர் பிரிவிற்கான விவாதப் போட்டி விலக்கப்பட்டுள்ளது.**
2) **தனிநடிப்புப் போட்டி 13 வயதுக்குட்பட்டவர்களுக்கான (மேற்பிரிவு) போட்டியாக நடை பெறும்.** ***(கடந்த ஆண்டு நடை பெற்ற 10 வயதுக்குட்பட்டவர்களுக்கான மத்திய பிரிவு தனிநடிப்புப் போட்டியும் 11 - 17 வயதினருக்கான மேற்பிரிவு தனிநடிப்புப் போட்டியும் விலக்கப்பட்டுள்ளன).***
3) **பல்திறன் போட்டி ஒரு விசேட போட்டியாக 13 - 30 வயதுக்குட்பட்டவர்களுக்கு நடாத்தப்படும்.** ***(கடந்த ஆண்டு பல்திறன் போடடிக்கான வயது எல்லை 18 - 30 வயது ஆகும்).***
4) **அண்மையில் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் குடியேறிய போட்டியாளர்களிற்கான தகுதி நிலையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.**

ஆண்டுதோறும் உங்களிடமிருந்து எமக்குக் கிடைக்கின்ற கருத்துக்களைக் கொண்டு, இப்படியான பல மாற்றங்கள் செய்யப்படுவதனால், எமது போட்டிகளுக்கான விதிமுறைகளைக் கவனமாக வாசித்து அறியவும். அதன் பின்னரே நீங்கள் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்யவேண்டும். எமது போட்டிகளுக்கான விதிமுறைகளும் மற்றைய விபரங்களும் இந்த விபரக் கொத்தில் அடங்கியுள்ளன. இவற்றைத் தமிழ்ப் பாடசாலைகளிலோ, அல்லது எமது இணையத் தளத்திலோ பெற்றுக் கொள்ளலாம். போட்டிக்கான விண்ணப்பப் படிவம் 2 பக்கங்களைக் கொண்டுள்ளது. தமிழ்ப்பாடசாலையூடாக விண்ணப்பிப்பவர்களின் விண்ணப்பப் படிவம் அவர்களின் பாடசாலையின் பிரதிநிதியால் சரிபார்க்கப்பட்டு விபரங்கள் உறுதி செய்யப்படவேண்டும். தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தேவையான அத்தாட்சிப்பத்திரங்களை பரீட்சை மண்டபத்திற்கு எடுத்துவரவேண்டும்.

எமது சங்கத்தின் திட்டங்களை உள்ளடக்கிய புதியதொரு இணையத் தளம் (www.kalappai.org) கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் பற்றிய அனைத்து விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது போட்டிகளில் மாநில, தேசிய மட்டங்களில் பங்குபற்றி உங்கள் திறமைகளைக் காண்பித்துப் பரிசுகளை வென்றெடுக்க எமது நல் வாழ்த்துக்கள்!!

**திரு. க. நரேந்திரநாதன்**
***இணைப்பாளர், தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் 2009***

தொடர்புகளுக்கு: PO Box 4040 Homebush NSW 2140. Tele: 02 882403051 or 0419.255 625E-mail:asogt.tc@gmail.com Web: www.kalappai.org